# தையிட்டியில் விகாரைக் காணியை சுவீகரிக்க முயற்சி நாளை செவ்வாய்க்கிழமை போராட்டத்துக்கு அழைப்பு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்தது




யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக் காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தடுத்து நிறுத்தி, மண்ணைப் பாது காக்க அனைவரும் அணி திரளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தையிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரைக் காணியை ஆக்கிரமிப்பதற்கு நில அளவைத் திணைக்களமும் அரச அதிகாரிகளும் வருகை தர இருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அளவீட்டுப் பணிகள் இடம்பெறுமாக இருந்தால் நிரந்தரமாகவே அந்தக் காணிகளைச் சுவீகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை எதிர்த்தும் நில அளவைப் பணிகளை எதிர்த் தும் நாளை செவ்வாய்க்கிழமை போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் தயாராகுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (க)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 23 திங்கட்கிழமை 11.09.2023 கதிர் 69








# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியின்

## தலைமையில் குழு – ஜனாதிபதி தீர்மானம்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சனல் 4 வெளியிட்ட சர்ச்சைக்குரிய ஆவணப்படத்தில் கூறப்பட்ட சமீபத்திய குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதேவேளை, பயங்கரவாதத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர்கள் தொடர்பாக முன்னாள் சட்டமா அதிபர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத்

2➤

# மட்டக்களப்பு கடல் பகுதியில் அதிகாலையில் நிலநடுக்கம்

## சுனாமி அச்சுறுத்தல் இல்லை

மட்டக்களப்பு கடற்கரையில் இருந்து சுமார் 310 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆழ்கடல் பகுதியில் இன்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.65 ஆக பதிவாகியுள்ளதோடு, இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் அகழ்வுப் பணி ஐந்தாவது நாளாக இன்று தொடர்ந்தது

## ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பு

முல்லைத்தீவு மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் ஐந்தாவது நாளாகவும் இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நடைபெற்றன.

இதன் போது, ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அதன்படி, காலையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கும்போதும், மதிய உணவு நேரம் மற்றும் மாலை பணிகள் நிறைவடையும்போதும் மட்டுமே ஊடகவியலாளர்கள் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடத்திற்கு அருகில் சென்று காணொளி அல்லது புகைப்படங்கள் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு ஏற்படும் தவறுகளைத் தாம் சுட்டிக்காட்டியதன் பின்னணியிலேயே, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் ஊடகங்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என

2➤

# கோழி பிடித்த கள்ளனும் கூட இருந்தே தேடுகின்றான் ஊடகச் சந்திப்பில் சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்றைய தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகச் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்.

அந்தச் சந்திப்பில் உரையாற்றிய அவர், கடந்த காலங்களில் கத்தோலிக்க மக்களைக் கொலை செய்து எப்படி கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதி ஆனார் என்பதனை வெளிப்படுத்தும்

2➤

# மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு

## ஐ.நா மனித உரிமைகள் பிரதித் தலைவர்

கடந்தகால மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாக ஐ.நா மனித உரிமைகள் பிரதித் தலைவர் நடா அல் நஷிப் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பதில் பொறுப்புக்கூறல் அவசியம் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (04)

# அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்ட த.தே.மக்கள் முன்னணி எம்.பிக்கள்



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் ஐந்தாவது நாளாக இன்று இடம்பெற்று வரும் நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டனர்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த ஆறாம் திகதி புதன்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# நரிகளின் கூட்டத்திற்கு இரையாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தலைவரும்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் தலைவரும் தந்திர நரிகளின் கூட்டத்திற்கு பலியாகியுள்ள நிலையில், கட்சியையும் கட்சித் தலைவரையும் அதன் பிடியில் இருந்து மீட்கும் வரை கட்சியை விட்டு விலக்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஹெட்டிபொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிலரது செயற்பாடுகள் காரணமாக தாம் கட்சிப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட போதும், நாட்டு மக்களின் மனங்களில் இருந்து விரட்ட முடியாது என்பதை மக்களின் பதில்கள் எடுத்துக்காட்டுவதாக தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைத்த தாம் மற்றவர்களின் வதந்தி பேச்சு பேருந்தில் மிருகம் போல் இழுத்துச் செல்லப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். புதிய கூட்டணிகள் மற்றும் காட்சிகள் குறித்து ஆலோசனைகள் மற்றும் அழைப்புகள் வருவதாகவும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், கட்சியில் இழந்த ஜனநாயகத்தை மீட்டெடுக்க தொடர்ந்தும் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முதல் நாள் தாம் கட்சித் தலைவரை சந்தித்ததாகவும், அவரது தீர்மானத்தினை நேருக்கு நேர் கூறமுடியாமல் போனது வருத்தமும் ஆச்சரியமும் அளிப்பதாக தயாசிறி தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் திடீரென எடுக்கப்பட்டது அல்ல என்பதை தாம் அறிவதாகவும், இந்த அரசியலால் தாம் ஒருபோதும் நோய்வாய்ப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் திருடர்களின் சகவாசத்தில் இருப்பதை விட கட்சியை சுத்தப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் எனவும் அதுவரை தாம் இலங்கையை விட்டு வெளியேறப் போவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

## அரசியலில் களமிறங்கியுள்ள முன்னணி வர்த்தகர் திலித்

இலங்கையின் முன்னணி வர்த்தகரான திலித் ஜெயவீர அரசியலில் பிரவேசித்துள்ளார். இலங்கையின் பிரதான ஊடக நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான இவர் மௌபிம ஜனதா கட்சியின் மௌபிம ஜனதா கட்சியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

குறித்த கட்சியின் சின்னமாக விமான சின்னம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் ஆளுநருமான ஹேமகுமார நாணயக்கார இதற்கு முன்னர் மௌபிம ஜனதா கட்சியின் தலைவராக இருந்த நிலையில், தற்போது அவர் கட்சியின் சிரேஷ்ட தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிப் பட்டியலின்படி, விமானம் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் மௌபிம ஜனதா கட்சியின் கட்சித் தலைவராக திலித் ஜயவீர பெயரிடப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# அமைச்சர்களின் பதவி பறிப்பு? மாற்றப்படவுள்ள இலாகாக்கள்!

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் 8 புதிய அமைச்சுப் பதவிகளுக்கான நியமனங்களை அரச தலைவர் என்ற ரீதியில் வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த மறுசீரமைப்பின்போது நான்கு புதிய நியமனங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் பல அமைச்சர்கள் பதவி பறிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாதத்திற்குள் பல அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றியமைக்கப்படும் என தென்னிலங்கை அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றம் குறித்து இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், ஆளும் கட்சியுடன் இணைந்துள்ள அரசியல் கட்சிகளுக்குள் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ள நிலையில் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சர் மாற்றப்பட வாய்ப்பு உள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)




## கோழி பிடித்த கள்ளனும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் ஆதாரமாக, தற்பொழுது சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் அமைந்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேசப் பொறிமுறைகளுக்கு அமைவாக சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்திவருகின்றனர். அதன் ஊடாக உண்மைத் தன்மையை கண்டறியப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

போர்க்குற்றம் நடைபெறவில்லை என்று அன்று கர்த்தினல் ஆண்டகை தெரிவித்தார். தற்பொழுது போர்க்குற்றம் நடைபெற்றது என்கிறார். அவர்களே தற்பொழுது சர்வதேச விசாரணை தேவை என்கின்றனர்.

கோழி பிடித்த கள்ளனும் கூட இருந்தே தேடுகின்றான் என்பது போல தற்போதைய நிலைமை உள்ளது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, தான் வெல்வதற்காகவே தற்பொழுது சனல் 4 என்ற குண்டை தற்போதைய ஜனாதிபதி ரணில் வெடிக்க வைத்துள்ளார்.

எது எப்படி இருந்தாலும் தமிழர்களுக்கு எவ்வகையிலும் நீதி கிடைக்கப் போவதில்லை. யுத்தம் முடிவடைந்ததும் தொடர்ச்சியாக குழுக்களை மட்டுமே அமைத்து வருகின்றார்களே தவிர, எந்த விதத் தீர்வும் அவற்றினால் கிடைக்கபோவதில்லை, என்று தெரிவித்துள்ளார். (02)

## கொக்குத்தொடுவாய் அகழ்வுப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின்போது மனித எச்சங்கள் மற்றும் துப்பாக்கிச் சன்னங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுக்குழுவை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

எவ்வாறாயினும், வெளிப்படைத்தன்மையின்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை மேற்கோள் காட்டி தொடர்ச்சியாக அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை கத்தோலிக்க திருச்சபை, பாதிக்கப்பட்ட தரப்பினர், சிவில் சமூக குழுக்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் விமர்சித்துவருகின்றன.

கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியின்போது பேசிய முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பெரிய சதித்திட்டத்திற்கு தெளிவான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, பல தரப்பினரும் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்த அதேநேரம், அவர் இந்த ஆண்டு ஏப்ரலில் வாக்குமூலம் பதிவு செய்ய பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# சாய்ந்தமருதில் பயனாளிகளுக்கு வளர்ப்பு ஆடுகள் வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு, டிசப். 11

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கீழ் வசிக்கும் தேவையுடைய பயனாளிகளுக்கு விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய காரியாலயத்தில் வைத்து. வளர்ப்பு ஆடுகள் இன்று சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக்கினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய அதிகாரி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு ஆடுகளைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

# தொழில் முனைவோருக்கான இலவசக் கருத்தரங்கு!





(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் "நாளைய தொடுவானத்திற்கு வழி செலுத்துதல் " எனும் தலைப்பில் இலவசக் கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைதீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எந்திரி எம்.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் லயன் கலாநிதி எம். கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தார்.

தொழில் முனைவோர் மற்றும் உயர்கல்விக்காகக் காத்திருப்போர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள் .

அங்கு சாதனையாளர்களின் அனுபவங்களும் வளவாளர்களின் கருத்துக்களும் பகிரப்பட்டன. கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# நாட்டில் மீண்டும் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்கலாம்! - கட்டுப்பாட்டுப் பிரிவு

நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்து வருவதால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கலாம், என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் 2023 ஆம் ஆண்டில் இதுவரை 63 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேநேரம் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது.

மேல் மாகாணத்தில் 30,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வருடம் பதிவான மொத்த டெங்கு நோயாளர்களில் 20 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரிக்கவும், வாரம் ஒருமுறையாவது துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.



குறிப்பாக, அண்மைய நாட்களாகப் பெய்து வரும் மழையினால் பாடசாலை வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. (க)

# யாழில் இடம்பெற்ற விபத்து குடும்பஸ்தர் தலத்தில் பலி



யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் தனியார் பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த எமில் ரவி என்ற 44 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு கோப்பாய் இராச பாதை வீதியில் பயணித்த வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மீது மோதியதில் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பேருந்தின் சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)




JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media
Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction
Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
Digital Media Partner
வீரகேசரி
காலைக்கதிர்
Kalaikkathir

# மாலைதீவு அதிபர் தேர்தலில் இழுபறி இரண்டாவது சுற்றுத் தேர்தலுக்கு முடிவு



மாலைதீவு நாட்டில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி ஏற்பட்டுள்ளது. இதனால் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தென்னாசிய நாடான மாலைதீவில் நேற்று முன்தினம் அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் ஆளும் மாலைதீவு ஜனநாயகக் கட்சியின் சார்பில் தற்போதைய அதிபர் இப்ராகிம் மொகமட் சோலிக் மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து, பிரதான எதிர்க்கட்சியான மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சியில் சார்பில் மொகமட் முயிஸ் களமிறங்கியிருந்தார். இவர்கள் தவிர மேலும் 6 பேர் அதிபர் பதவிக்கான போட்டியில் களத்தில் உள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த தேர்தலில் மக்கள் ஆர்வமுடன் வாக்களித்தனர். இதனால், வாக்குப் பதிவு மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தேர்தலில் பதிவான வாக்குகள் உடனடியாக எண்ணப்பட்டன.

மாலைதீவைப் பொறுத்தவரையில் அதிபர் தேர்தலில் வெற்றிப்பெற ஒரு வேட்பாளர் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், நடந்து முடிந்த தேர்தலில் 8 வேட்பாளர்களில் யாரும் 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெறவில்லை. அதே சமயம் எதிர்க்கட்சி வேட்பாளரான மொகமட் முயிஸ் 46 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஆச்சரியமூட்டும் வகையில் முன்னிலை பெற்றார். தற்போதைய அதிபர் இப்ராகிம் மொகமட் சோலிக் 39 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி ஏற்பட்டுள்ளதால் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் நடந்து முடிந்த தேர்தலில் முதல் 2 இடங்களையும் பிடித்த எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தற்போதைய அதிபர் ஆகிய இருவரும் மட்டும் போட்டியிடுவார்கள் என்று தெரிகிறது.

இந்த மாத இறுதியில் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடத்தப்படும் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அதிபர் இப்ராகிம் மொகமட் சோலிக் இந்தியா சார்புடையவராக அறியப்படுகிறார்.

அதேவேளையில் அவரை எதிர்த்துக் களமிறங்கி இருக்கும் மொகமட் முயிஸ், சீனாவின் ஆதரவாளராக உள்ளார். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றால் மாலைதீவில் உள்ள இந்தியப் படைகளை அகற்றுவேன் என்றும், இந்தியாவுக்குச் சாதகமாக இருக்கும் நாட்டின் வர்த்தக உறவுகளை சம நிலைப்படுத்துவேன் என்றும் அவர்வாக்குறுதி அளித்துள்ளார். (04)

## எதிர்க்கட்சிக் கூட்டணியின் பெயர் என்பதால் பா.ஜ.க.வுக்கு “இந்தியா” எரிச்சலூட்டுகிறது!

பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றுள்ள இந்தியாவின் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தலைநகர் பாரிசில் ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட பல நாட்டு மாணவர்களுடன் உரையாடியுள்ளார். அப்போது, வெளிநாட்டு மற்றும் இந்திய மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்குராகுல்காந்தி பதிலளித்துப் பேசினார்.

அதன்போது, இந்திய அரசியல் சாசனத்தில் இந்தியா, பாரத் ஆகிய இரண்டு சொற்களுமே உள்ளன. அதனால், எங்களுக்கு அந்த இரண்டு சொற்களின் பயன்பாட்டிலுமே எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் சூட்டப்பட்டதால் பா.ஜ.க.வுக்கு இந்தியா என்ற பெயர் எரிச்சலூட்டுகிறது. அதனாலேயே அவர்கள் பெயரை மாற்ற முற்படுகிறார்கள்.

இந்தியாவில் ஆளும் அரசு அதிகாரத்திற்காக எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறது. 40 வருடங்களில் இல்லாத வகையில் வேலையின்மை வீதம் மிக அதிகளவில் உயர்ந்துள்ளது. இந்து என்று பா.ஜ.க. சொல்லும் எவையும் உண்மையில் இந்து மதத்தில் இல்லை.

தங்களை விடப் பலவீனமானவர்களைத் துன்புறுத்த வேண்டும், என



இந்து மதத்தில் சொல்லப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க.வின் செயல்பாடுகளுக்கும் இந்து மதத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை.

கீதையை நான் படித்து விட்டேன். என்னிடம் பல உபநிடதங்கள் உள்ளன. பல இந்துப் புத்தகங்களை படித்து விட்டேன். இந்தியாவில் மிகப்பெரிய அளவில் சமத்துவமின்மை நிலவுகிறது. ஆட்சி அதிகாரத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்தவருக்கு எந்த இடமும் வழங்கப்படுவதில்லை. பட்டியலினத்தோர், ஒபிசி, சிறுபான்மை, பழங்குடியினர் ஒடுக்கப்படுகின்றனர்.

எந்த விலை கொடுத்தாவது அதிகாரத்தைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என நினைக்கின்றனர். நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கான போராட்டம் தொடரும், என்று ராகுல்காந்தி கூறியுள்ளார். (04)



## நைஜீரியா ஆற்றில் படகு விபத்து 24 பேர் பலி! - பலரைக் காணவில்லை

நைஜீரியா நாட்டின் நைஜர் மாகாணத்தின் மொக்வா நகரில் உள்ள ஆற்றில் நேற்று 100 பேர் படகில் பயணம் மேற்கொண்டனர். அண்டை நகரில் விவசாய பணிக்காக இவர்கள் படகில் பயணம் செய்தனர்.

இவர்கள் சென்ற படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணம் செய்த அனைவரும் ஆற்றுக்குள் விழுந்தனர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்-குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆற்றில் சிக்கித்தவித்த 30 பேரை உயிருடன் மீட்டனர்.

ஆனால், இந்த படகு விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளதாகவும், படகு விபத்தில் பலர் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

## ஜி20 தலைமைப் பொறுப்பு பிரேஸிலிடம் ஒப்படைப்பு


டில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாடு ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பானது பிரேஸிலிடம் ஒப்படைக்கப்பட்டது

ஜி20 கூட்டமைப்புக்கான தலைமைப் பொறுப்பானது ஆண்டுதோறும் சுழற்சி முறையில் ஒவ்வொரு நாட்டிடம் ஒப்படைக்கப்படும். அதன்படி, அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தோனேசியாவிடமிருந்து கடந்த ஆண்டு இந்தியா பெற்றது. கடந்த ஆண்டு டிசம்பர் முதலாம் திகதியில் இருந்து இந்தியா அதிகாரபூர்வமாக ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமை வகித்துவந்தது.

கடந்த 10 மாதங்களில் இந்தியா பல்வேறு பகுதிகளில் 200 க்கும் அதிகமான ஜி20 கூட்டங்களை நடத்தியது. அதன் முக்கிய நிகழ்வாக, ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கான உச்சி மாநாடு டில்லியில் சனிக்கிழமை தொடங்கியது. மொத்தம் 3 அமர்வுகளாக நடைபெற்ற மாநாடு, ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

அதையடுத்து, ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிபர் லூலா தசில்வாவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஒப்படைத்தார். வரும் டிசம்பர் முதலாம் திகதியில் இருந்து ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிகாரபூர்வமாக ஏற்கும். (04)

## மொராக்கோவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உயிரிழப்பு எண்ணிக்கை 2,012 ஆக அதிகரிப்பு



மொராக்கோவில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,012 ஆக அதிகரித்துள்ளது.

வடமேற்கு ஆபிரிக்க நாடான மொராக்கோவின் அட்லஸ் மலைத் தொடர் பகுதியில் அமைந்துள்ள மராகெஷ் - சாபி பிராந்தியத்தில் வெள்ளிக்கிழமை இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவானதாக மொராக்கோ நிலநடுக்கவியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஸ்பெயின், போர்ச்சுகல், அல்ஜீரியா உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் உணரப்பட்டன. வடக்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த 120 ஆண்டுகளில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது என அறியப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் மராகெஷ் - சாபி பிராந்தியத்தில் பல்வேறு கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

சனிக்கிழமை இரவு நிலைவரப்படி, நிலநடுக்கத்தால் 2,012 பேர் உயிரிழந்திருப்பதாக அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. அதிகபட்சமாக அல் ஹௌஸ் மாகாணத்தில் 1,293 பேரும், தரெ-ளடந் மாகாணத்தில் 452 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும், 2,059 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும், இவர்களில் 1,404 பேரின் நிலைமை கவலைக்கிட மாக உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களையும், பலியானவர்களின் சடலங்களையும் மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (04)

# அடிப்படை வசதிகளற்ற கிராமத்தின் முதல் 3ஏ பெற்ற சாதனை மாணவி

(வி.ரி.சகாதேவராஜா)

எந்த அடிப்படை வசதிகளுமற்ற மிகவும் பின்தங்கிய பொத்துவில் றொட்டைக் கிராம வரலாற்றில் செல்வி சாந்தலிங்கம் றியோன்சியா என்ற மாணவி முதல் தடவையாக 3 ஏ சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்.

அதுமட்டுமின்றி பொத்துவில் தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் முதல் 3 ஏ பெற்ற முதல் மாணவியும் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள றொட்டைக் கிராமம் அடிப்படை வசதிகளற்ற பின் தங்கிய குக்கிராமமாகும். அங்கு சுமார் 78 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அங்கிருந்து சுமார் 7 கிலோற்றர் தொலைவில் உள்ள பொத்துவில் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு மாணவர்கள் சென்று கற்பது வழக்கம்.

றொட்டைக் கிராமத்திலிருந்து சுமார் 20 மாணவர்கள் பிரதான வீதி வரை இரண்டு கிலோ மீற்றர் நடந்து சென்று, பின்னர் பொத்துவிலுக்கு ஐந்து கிலோமீற்றருக்கு பஸ்ஸில் பயணிக்கின்றனர்.

றொட்டையைச் சேர்ந்த சாந்தலிங்கம் கிருஷ்ணகுமாரி தம்பதிகளின் மூன்றாவது

புதல்வி றியோன்சியா. இம்மாணவி காலையில் வீட்டிலிருந்து நடந்து பிரதான வீதியை அடைந்து பின் பேரூந்தினூடாக பாடசாலையை அடைவதும், மீண்டும் பேரூந்தினூடாக பிரதான வீதி அடைந்து மீண்டும் நடந்து வீட்டை அடையும் போது 2.30 மணியாகி விடும்.

சிலவேளைகளில் பிரத்தியேக வகுப்பிற்காகபொத்துவிலில் கழித்தால் வீடு வரும்போது நேரம் 6.30 ஆகிவிடும். சில நேரங்களில் யானைகளின் ஆபத்தும் இருக்கும். இது இவரது 3 வருடக் கற்கைக்கான செயற்பாடாகும். இவர் இனிமேல் இப்பிராந்தியத்திற்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்வார் என்று பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தந்தையார் சாந்தலிங்கம். ஒரு மீனவர். ஒரு வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அவர் வரலாற்று இரட்டைச் சாதனையைப் புரிந்துள்ளார்.

சாதனை மாணவி சாந்தலிங்கம் றியோன்சியா தனது கல்வி முயற்சி பற்றிக் கூறும்போது, "எனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை பொத்துவில் தமிழ் மகாவித்தியாலயத்தில் பயின்றேன். நான் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்றேன். சித்தி அடையவில்லை. சாதாரண தரப் பரீட்சையில் 5ஏ, 2பி, 1 சி, 1 எஸ் பெற்றேன்.



உயர்தரத்தில் கலைப் பிரிவில் பயின்றேன். தமிழ், விவசாயம், புவியியல் பாடங்களைத் தேர்வு செய்து படித்தேன். நான் எதிர்பார்த்த மூன்று ஏ சித்திகள் கிடைக்கப்பெற்றன.

மாவட்டத்தில் 25 ஆவது நிலையும், 1.9 இசட் புள்ளிகளும் கிடைக்கப்பெற்றன.

எனது லட்சியம் விவசாயத் துறையில் ஒரு நிபுணராக வருவது. எத்தனை வசதியீனங்கள் சவால்கள் வந்தாலும் படிப்பை ஒருபோதும் கைவிடக் கூடாது, என்றார்.





# நல்லூர்த் திருவிழாவில் கவனமீர்த்த குழந்தை!

நல்லூர்த் திருவிழாவுக்கு வந்திருந்த குழந்தையொன்றின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவ கால மாம்பழத் திருவிழா இன்று காலை நடைபெற்றது.

இத்திருவிழாவுக்கு குழந்தை ஒன்றை, அதன் பெற்றோர் பழனியாண்டவர் கோலத்தில் ஆடை அணிவித்து அழைத்து வந்திருந்தமை பலரது கவனத்தையும் கவர்ந்துள்ளது. அந்தக் குழந்தையின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டுவருகின்றன. (04)

# காரைதீவு ஸ்ரீ பாலையடி வால விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தில் இரவுத் திருவிழா!

காரைதீவு ஸ்ரீ பாலையடி வால விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் இரவுத் திருவிழாக்கள் வெளி வீதியுலாவுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நேற்று இரண்டாம் நாள் இரவு திருவிழா நடைபெற்றபோது ஏராளமான பக்தர்கள் கூடி இறையருளைப் பெற்றனர். (படங்கள் - வி.ரி.சகாதேவராஜா)






# கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியின் வளாகத்தில் தீப்பரவல் மரங்கள் எரிந்தன

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியின் வளாகத்தில் பின்புறத்தில் நேற்றைய தினம் விசமிகளால் தீவைக்கப்பட்டதன் காரணமாக, பெறுமதி மிக்க பல மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

பாரிய தீ நாசத்திலிருந்து பாடசாலையை பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள், பொலிசார் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வநது காத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிசார்



தெரிவிக்கையில், தொடர்ச்சியாக பல பகுதிகளை தீ விபத்துகள் இடம்பெற்றுவரும் நிலையில், மக்கள் தமது அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக பொது இடங்களில் தீவைப்பதினைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தற்பொழுது கடும் வறட்சியும் வெப்பமும் கடும் காற்றும் அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் விழிப்பாக செயல்பட வேண்டும், என குறிப்பிட்டனர். (02)

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்திருந்தால் - உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது!

ரெலோ சபா குகதாஸ் அறிக்கை



இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதி வழங்கப்படிருந்தால், 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு படுகொலை இடம்பெற்றிருக்காது, என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணித் தலைவரும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தொடர்பில் சனல் 4 தொலைக் காட்சியில் வெளியாகிய பின்னர் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அன்று முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங் கேற்றிய அதே தரப்பினர்தான் ஈஸ்டர் படுகொலையை அரங்கேற்றினார்கள் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அதேவேளை, முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு சர்வதேச விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கியிருந்தால் உயிர்த்த ஞாயிறு படுகொலை இடம்பெற்றிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் காலங்களில் ஆட்சிக் கதிரைகளுக்காக வேறு வடிவங்களிலும் இனப்படு கொலைகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருப் பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கும் உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும், எனவும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)




## தோட்ட நிர்வாகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று போராட்டம்

தமக்கான தொழில் உரிமை மற்றும் பாதுகாப்பை வழங்குமாறு வலியுறுத்தி பொகவந்தலாவ, டியன்சின் தோட்ட தொழிலாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடு பட்டனர்.

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட டியன்சின் தோட்டத்தில், தேயிலை மலையில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி யொருவர், திடீரென வழுக்கி விழுந்துள்ளார்.

இதனால் அவருக்கு கை, கால்களில் காயம் ஏற்பட் டுள்ளது. எனினும், அவரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கு தோட்ட நிர்வாகம் போக்குவரத்து வசதியை செய்துகொடுக்கவில்லை என தொழிலாளர் கள் விசனம் தெரிவித்தனர்.

அத்துடன் உபாதை ஏற்பட்ட நபருக்கு அந்த நாளுக் கான சம்பளம வழங்குவதற்கும் தோட்ட நிர்வாகம் இணக்கம் தெரிவிக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடுகளைக் கண்டித்- தும், தமக்கான தொழில் உரிமைகளை வழங்குமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. (04)

## சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழு கலந்துரையாடல்!

சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழுவின் அதிகாரிகளுடன் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவியில் மீளாய்வு குறித்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழு 14 மற்றும் 27 ஆம் திகதிக்கு இடையில் கொழும்புக்கு விஜயம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என அதன் ஊடக பேச்சாளர் முன்னதாக தெரிவித்திருந்தார்.

2023 மார்ச் மாதத்தில், இலங்கையின் பொருளா தாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக, 48 மாத நீட்டிக்கப்பட்ட வசதியின் கீழ் சுமார் 3 பில்லியன் டொலர்களை வழங்க அனுமதி வழங்கியிருந்தது.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத் தன்மையை மீட்டெடுப்பது, ஏழை மற்றும் பாதிக்கப் படக் கூடியவர்கள் மீதான பொருளாதார தாக்கத்தை தணிப்பது, நிதித்துறை ஸ்திரத்தன்மையை பாதுகாத் தல் மற்றும் நிர்வாக திறனை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் கொண்டுவரப்பட் டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை யின் முடிவை அடுத்து இலங்கைக்கு முதற்கட்டமாக சுமார் 333 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (க)

## நல்லூரில் இன்று மாம்பழத் திருவிழா!





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழாவின் 22ஆம் நாள் திருவிழாவான மாம்பழத் திருவிழா (தண்டாயுதபாணி உற்சவம்) இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 அளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து, பிள்ளையாரும் முருகப் பெரு மானும் வெளிவீதியுலா வந்தனர். இன்றைய தினம் முருகப் பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்த ருளியிருந்தார்.

மாம்பழத் திருவிழாவில் ஏராளமான அடியார்கள் கலந்துகொண்டனர்.

நாரதர் கொண்டுவந்த மாம்பழத்தை முருகனுக் கும் பிள்ளையாருக்கும் பகிர்ந்த புராணக் கதையை மையமாகக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் இந்தத் திருவிழா இடம்பெற்று வருகிறது.(02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2023இல் வெளியிடப்பெற்றது.